சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.59/2023</u>

26.03.2026

வா.சா.1 திருமதி.நித்யா, க/பெ. அமல்ராஜ்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு 2011 ஆம் வருடம் திருமணம் நடைப்பெற்றது. திருமணத்தின் போது என் கணவர் சென்னையில் இருந்தார் என்றால் சரிதான். திருமணம் முடிந்த பின்னர் நான் சென்னையில் என் கணவருடன் வசித்து வந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்து சிறுகளத்தூர் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் நான்கெல்லை கிழக்கே - சீனிவாசன் நிலமும், தெற்கே - குமார் வயலும் உள்ளது. வடக்கும், மேற்கும் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் தாவா சொத்திற்கு மேற்கே தங்கள் நிலம் உள்ளதாக தன்னிச்சையாக பதில் அளிக்கிறார். நான் சொன்ன நான்கெல்லை புல எண்.67/2 க்கு சம்பந்தப்பட்டது. புல எண்.67/3-ன் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் 12.02.2026 அன்று தான் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை கிரயம் பெறும் முன்பு 2023 ஆம் வருடம் கிரய ஒப்பந்தம் செய்துக்கொண்டேன். கிரய ஒப்பந்தப்படி எவ்வளவு கிரயம் பேசப்பட்டது எவ்வளவு தொகை கொடுத்தேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் பெயரில் கிரய ஒப்பந்தம் போடவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் பெயரில் கிரய ஒப்பந்தம் போடப்பட்டது. கிரய சாசனம் 27.01.2023 அன்று எழுதினோம். என் பெயரில் உள்ள கிரய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா சொத்தை சுவாதீனம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2023 ஆம் வருடத்திலிருந்து நான் தாவா சொத்தை சாகுபடி செய்தேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நடராஜன் தாவா சொத்தை சாகுபடி செய்தார் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நடராஜன் அனுபவத்தில் தாவா சொத்து இருந்தது என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் எந்த தேதியில் அனுபவம் எடுத்தேன் என்றால் என் மாமனார் சாகுபடி செய்துவந்தார். நான், எனது மாமனார்,

எனது தந்தை மூவரும் சேர்ந்துதான் சாகுபடி செய்தோம். நாங்கள் மூவரும் சேர்ந்து சொத்தை சாகுபடி செய்தோம் என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆரோக்கியசாமி எனது மாமனார் ஆவார். நான் பி.டெக் படித்துள்ளேன். எனது மாமனார் தாவா சொத்து சம்பந்தமாக குடவாசல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து சம்பந்தமாக கிராமத்தில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரிதான். பஞ்சாயத்தின் போது பிரதிவாதி தாவா சொத்தில் விவசாயம் செய்துவருவதை ஒப்புக்கொண்டு என் பெயரில் கிரயம் செய்துக்கொடுத்த நபரை அழைத்துவந்து சரிசெய்து கொடுப்பதாக சொன்னார்கள் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது, கேள்விப்பட்டேன்.

**வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது**.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.